**13.11.2025**
**MCOP.10/2024**
**இ.ம.எண்.03/2025 மனு உத்தரவின் பேரில் ம.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி:–**

01.06.2019–ல் தஞ்சாவூர், மருத்துவக்கல்லூாரி மருத்துவமனையில் விபத்து ஏற்பட்டு சிகிச்சையில் இருந்த எனது மகனை பார்க்க செல்வதற்கு மருத்துவமனையில் வழங்கிய பார்வையாளர் அட்டை அசல் **ம.சா.ஆ.11** ஆகும். 24.06.2019–ல் எனது மகன் பாலகுமரன் இறந்து விட்டார். அவரின் இறப்புச்சான்றிதழ் **ம.சா.ஆ.12** ஆகும். 27.01.2017–ல் விபத்து ஏற்படுத்திய பேருந்தினுடைய MV Report நகல் **ம.சா.ஆ.13** ஆகும். 24.01.2017–ல் இறந்து போன என் மகன் ஓட்டிச்சென்ற வாகனத்தினுடைய MV Report நகல் **ம.சா.ஆ.14** ஆகும். இறந்து போன எனது மகனின் புகைப்படம் **ம.சா.ஆ.15** ஆகும். 16.07.2019–ல் எனது மகன் பாலகுமாரனின் வாரிசுச்சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.16** ஆகும். 13.01.2017–ல் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்துப்பதிவேடு நகல் **ம.சா.ஆ.17** ஆகும். 10.03.2017–ல் தஞ்சாவூர், மருத்துவக்கல்லூாரி மருத்துவமனையில் வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி நகல் **ம.சா.ஆ.18** ஆகும். 31.05.2019 அன்று என் மகனை மீண்டும் மேல்சிகிச்சைக்கு அனுப்பிய பரிந்துரை கடிதம் நகல் **ம.சா.ஆ.19** ஆகும். இறந்து போன எனது மகன் பாலகுமாரனின் ஆதார் அட்டை நகல் **ம.சா.ஆ.20** ஆகும். 13.01.2017–ல் தஞ்சாவூர், மருத்துவக்கல்லூாரி மருத்துவமனையில் வழங்கிய

பாலகுமாரனின் சிகிச்சை விவரங்கள் அடங்கிய நோட் அசல் **ம.சா.ஆ.21** ஆகும். எனக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ள நிலையில் என் மகன் விபத்தில் காலமாகிவிட்டார். என் கணவர் இறந்து 20 வருடங்களுக்கு மேல் ஆகிறது. மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.